# பரம நம்பிக்கை

ஜெபம் பண்ணி விழித்திருங்கள்

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் (சங். 143:10)

ESTD. : 1978

மலர் - 48 ஏப்ரல் – 2026 இதழ் 75


# தேவ சித்தம் செய்கிறவர்களைப் பலப்படுத்துகிறார்

(சகோதரி ரீட்டா ஏசாயா)

**ஏசாயா 41:10 – நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்.**

வாசக நேயர்களே! மீண்டுமாய் இவ்விதழ் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். தேவன் அவருடைய பிள்ளைகளாகிய நம்மை பலப்படுத்தி, நமக்கு உதவி செய்து நம்மை நடத்தி வருகிற பாதைகளை இவ்விதழிலே தியானித்து வருகிறோம்.

கடந்த இதழிலே தேவ பெலனை இழந்த சிம்சோனைக் குறித்துத் தியானித்தோம். இவ்விதழிலே தேவ சித்தம் செய்கிறவர்களை அவர் எவ்விதம், பலப்படுத்துகிறார் என்பதை தியானிக்கப் போகிறோம். இயேசு பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காகவே இந்த உலகத்துக்கு வந்தார். பிதா செய்ய சொன்ன காரியங்களையெல்லாம் இயேசு செய்து முடித்தார். அவர் பிதாவின் சித்தத்தை செய்வதற்கு அநேகம் பாடுகளைப்பட்டார். கடைசியாக கெத்சேமனேயில் அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற முழங்கால் படியிட்டு "பிதாவே உமக்குக் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது" என்று ஜெபம் பண்ணினார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினான் என்று பார்க்கிறோம்.

அருமையான தேவ பிள்ளைகளே! பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற இயேசு எவ்வளவாக பாடுபட்டார். அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரக்கத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது என்று பார்க்கிறோம். தேவ குமாரனாம் இயேசு பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற அவ்வளவு பாடுகளைப் பட்டார். இன்று நாமும் அவருடைய சித்தம் செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை " என்கிறார். (மத். 7:21) அந்நாளில் அநேகர் வந்து "உமது நாமத்தினாலே தீர்க்கத்தரிசனம் உரைத்தோம், பிசாசுகளைத் துரத்தினோம் அற்புதங்களைச் செய்தோம்" என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை அக்கிரமச் செய்கைகாரரே என்னைவிட்டு அகன்று போங்கள்" என்று அவர்களுக்குச் சொல்லுவேன் என்கிறார் (மத். 7:22,23)

அருமையான தேவ பிள்ளைகளே! இயேசுவைப் போல நாமும் தேவ சித்தம் செய்கிறவர்களாய் காணப்பட வேண்டும். தேவ சித்தம் செய்வது அவ்வளவு இலேசான காரியம் அல்ல. எனவே தேவ சித்தம் செய்கிறவர்களை அவர் பலப்படுத்துகிறார். நாம் இவ்வுலகத்திலே நிறைவேற்ற வேண்டிய தேவ சித்தம் என்ன என்பதை வேதவசன ஆதாரத்தோடு தியானிப்போம்.

**I. பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது:** – (I தெச. 4:3)

நாம் பரிசுத்தமுள்ளவர்களாய் ஜீவிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இயேசுவுக்காக நாம் எவ்வளவு காரியங்களைச் செய்தாலும் நாம் பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் மூன்றுமே பரிசுத்தமாயிருக்க வேண்டும். மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்தக் கடவோம் என்று அப்.பவுல் கூறுகிறார் (II கொரி 7:1)

தேவ பிள்ளைகளே! யோசேப்பு தேவனுக்குப் பயந்து ஜீவித்த தேவ மனுஷன் அவனுக்கு நேரிட்ட துன்பங்கள் ஏராளம். போத்திப்பாரின் மனைவி அவனைப் பாவத்துக்குட்படுத்த நினைக்கும் போது, அவன் இது தேவனுக்கு விரோதமான பாவம் என்று சொல்லி அதற்கு விலகி ஓடினான். (ஆதி. 39:9) அதினால் அவனுக்குக்

கிடைத்தது சிறைச்சாலை. சிறையில் எத்தனையோ வேதனைகளை சகித்தான். அவன் கால்களை விலங்குப்போட்டு ஒடுக்கினார்கள். அவன் பிராணன் இரும்பில் அடைக்கப்பட்டிருந்தது என்று சங்கீதம் 105:18ல் பார்க்கிறோம். பரிசுத்த ஜீவியத்துக்காக அவன் அவ்வளவு பாடுகளைச் சகித்தான். கர்த்தரோ யோசேப்போடே இருந்தார். உபத்திரங்களிலும் பாடுகளிலும் பலப்படுத்துகிற தேவன் அவனோடிருந்து அவன் மேல் கிருபை வைத்து அவனைப் பாதுகாத்து மேன்மையாக உயர்த்தினார். யோசேப்பைப் பலப்படுத்தின தேவன் தேவ சித்தம் செய்யும் படியாக பரிசுத்த ஜீவியத்தைக் காத்துக் கொள்ளுகிறவர்களை பலப்படுத்திச் சகாயம் பண்ணுவார்.

**II.எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்வதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது : ( Iதெச.5:18)**

அடுத்தபடியாக தேவனுடைய பிள்ளைகள் எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதுவே அவருடைய சித்தமாயிருக்கிறது. எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்வது மிகவும் கடினமான காரியம். நல்ல காரியங்கள் நடந்தால் ஸ்தோத்திரம் சொல்வோம். சாட்சி சொல்லுவோம். ஆனால் சில வேளைகளில் நாம் எதிர்பாராத பிரச்சனைகள் இழப்புகள், போராட்டங்கள், வியாதிகள் நம்மை சூழும் போது எப்படி இருக்கிறோம். அந்த நேரத்திலே யோபு சொன்னது போல கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்று சொல்ல முடியுமா ?

பவுலும் சீலாவும் தேவ தரிசனத்துக்கு ஒப்புக்கொடுத்து மக்கெதோனியா பட்டணத்துக்கு வந்து அங்கே உள்ள பிலிப்பி பட்டணத்தில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்து கொண்டிருந்தார்கள். அங்கே குறி சொல்லுகிற ஆவியைப் பிடித்தப் பெண் விடுவிக்கப்பட்டதினால் அவளுடைய எஜமான்கள் இவர்களை அடித்து சந்தை வெளியில் இழுத்துக் கொண்டு போய் சிறையில் அடைத்தார்கள். அங்கே அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டி வைத்தார்கள். நடு ராத்திரியில் பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப் பாடினார்கள் என்று பார்க்கிறோம். உபத்திரவத்திலே கர்த்தரை நோக்கி புலம்பாமல் தேவனை ஸ்தோத்தரித்தார்கள். அங்கே அற்புதம் நடந்தது எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயின. கர்த்தர் தேவ சித்தத்துக்காக பாடுபட்ட தேவ பிள்ளைகளைப் பலப்படத்தினார், விடுதலையாக்கினார். தேவ பிள்ளைகளே! எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்தத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஸ்தோத்தரித்து தேவ சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களை தேவன் பலப்படுத்துகிறார்.

**III.சத்திய வசனத்தினாலே முதற்பலன்களாவதற்கு அவர் சித்தமாயிருக்கிறார்:(யாக். 1:18)**

கடைசியாக இயேசு கிறிஸ்துவோடு நாம் முதற்பலனாய் மீட்கப்படுவதற்கு அதாவது அவருடைய வருகையில் மறுரூபமாக்கப்பட்டு அவரோடு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு சத்திய வசனத்தை அவர் கொடுத்திருக்கிறார். அந்த வசனத்தினால் நம்மை உருவாக்க அவர் சித்தம் கொண்டிருக்கிறார். எனவே II தீமோ 3:16,17ல் கூறப்பட்டுள்ளது போல் "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும் கடிந்து கொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" எனவே தேவனுடைய பிள்ளைகள் வசனத்தை முழுமையாக கைக்கொள்ள வேண்டும். அந்த வார்த்தைகளுக்கு நம்மை பூரணமாக ஒப்புக் கொடுக்க வேண்டும். அதைத்தான் மத்தேயு 7:24ல் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின் படி செய்கிறவன் எவனோ அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன் என்று இயேசு சொல்லுகிறார். ஏனென்றால் பெருமழை சொறிந்து, பெரு வெள்ளம் வந்து, காற்று அடித்து அந்த வீட்டின் மேல் மோதியும் அது விழவில்லை. காரணம் அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருக்கிறது. அந்த கன்மலை கிறிஸ்துவே.

எத்தனையோ போராட்டங்கள், பிரச்சனைகள் வந்தாலும், உபத்திரவங்கள் பாடுகளின் நடுவிலும் நம்மை பலப்படுத்தி நிலைநிறுத்துவது அவருடைய ஜீவ வசனங்கள். எனவே தேவ பிள்ளைகள் அவருடைய வசனத்தைப் பிடித்து சுடர்களைப் போலப் பிரகாசிக்க வேண்டும். நமக்குள்ளாக விசுவாசத்தை தூண்டி எழுப்பிவிடுவது கர்த்தருடைய வசனம். பரிசுத்த ஆவியின் வல்லமையோடு கர்த்தருடைய வசனத்தில் பலப்படுவோமானால் அவர் வருகையில் முதற் பலனாய் மீட்கப்பட முடியும்.

தேவ பிள்ளைகளே! தேவ சித்தத்துக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, நம்மைப் பரிசுத்தப்படுத்தி, எல்லாவற்றிலும் அவரை ஸ்தோத்திரித்து வசனத்தில் நிலைத்திருந்து முதற்பலனாய் மீட்கப்படுவதற்கு நம்மை ஆயத்தப்படுத்துவோம். நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன் என்று சொன்ன தேவன், தேவ சித்தத்தை நிறைவேற்றின இயேசுவைப் பலப்படுத்தினது போல நம்மையும் பலப்படுத்தி முதற்பலனாய் மீட்டுக்கொள்வாராக!

# ஆசிரியர் கடிதம்

இனிய இயேசு கிறிஸ்துவுக்குள் அன்பான வாசக நேயர்களே! உங்களுக்கு எங்கள் அன்பான வாழ்த்துக்கள்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த வருடத்தின் நான்காவது மாதத்துக்குள்ளாக பிரவேசிக்க தேவன் நமக்கு கிருபை செய்திருக்கிறார் அவருக்கே மகிமையுண்டாவதாக!

கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் எங்களை அற்புதமாக நடத்தி வந்தார். 15.3.26 ஞாயிற்றுக் கிழமையன்று நமது விசுவாசிகளின் சுவிசேஷ ஐக்கியம் எம்.ஜி.ஆர். நகர் சபையில் கர்த்தருடைய வார்த்தையைக் கொடுக்க தேவன் கிருபை செய்தார். எத்தனையோ நெருக்கங்களின் நடுவிலும் கடந்த மாதம் முழுவதும் அவருடைய ஊழியங்களைச் செய்யவும் கர்த்தர் கிருபை செய்தார். பத்திரிகைகளை வெளியிடவும் உதவினார்.

இந்த மாதம் 22ம் தேதியோடு பாஸ்டர் அவர்கள் மகிமைக்குள் பிரவேசித்து ஒரு வருடம் ஆகிறது. கர்த்தர் கிருபையாய் எங்கள் குடும்பத்தையும், ஊழியங்களையும் நடத்தி வருகிறார். 22ம் தேதி முதலாம் ஆண்டு நினைவு ஆறுதல் கூட்டத்தை நடத்த வேண்டும். அதற்கான ஆயுதங்களைச் செய்துகொண்டு இருக்கிறோம். ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கடந்த மாதம் "நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" என்று கர்த்தர் வாக்குப் பண்ணினார். அதன்படியே அவர் அநேக காரியங்களை அறிவித்து நடத்துகிறார் அவருக்கே மகிமையுண்டாவதாக!

வழக்கமாக நடக்கிற எல்லா ஊழியங்களையும் தவறாமல் நடத்த கர்த்தர் கிருபை செய்து வருகிறார். இந்தமாதம் 14ம் தேதி வாலிபர் முகாம் நடத்த வேண்டும். மேலும் சிறு பிள்ளைகளுக்காக **V.B.S.** நடத்த வேண்டும். இவைகளுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தொடர்ந்து எங்களுக்காகவும் எங்கள் ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள் மாம்பலத்தில் சீக்கிரமாக சொந்தமான ஆராதனை ஸ்தலத்தை தேவன் ஆயத்தப்படுத்தித் தர ஜெபியுங்கள். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி
**ரீட்டா ஏசாயா**

## அறிவிப்பு

வாசக நேயர்களே! உங்கள் அன்புக்காகவும் ஜெபத்துக்காகவும் நன்றி செலுத்துகிறோம். தொடர்ந்து கர்த்தருடைய பெரிதான கிருபையினால் பாஸ்டர் அவர்கள் விட்டுச் சென்ற எல்லா ஊழியங்களையும் செய்து வருகிறோம். 'சிப்பியில் முத்து' வினா – விடை அனுப்புகிற தேவ பிள்ளைகளும் காணிக்கை அனுப்புகிற தேவ பிள்ளைகளும் தயவு செய்து பழைய விலாசத்தை மாற்றி புது விலாசத்தில் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் ஜெபக் குறிப்புகளை இதே விலாசத்திற்கு அனுப்புங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம் நன்றி!

எங்கள் புதிய விலாசம்

**Sis. Rita Isaiah**
**214/2, AVA Palace,**
**Flat G1, V.G.N. Padma Avenue,**
**Kolapakkam**
**Chennai - 600 128.**
**Ph : 9384710267, 9789893830**

உங்கள் ஜெபமும் ஆதரவும் எங்களுக்குத் தொடர்ந்து இருப்பதாக! நன்றி.

*Jesus Christ is coming very soon! Are you ready?*

PARAMA NAMBIKKAI

(Estd. 1978)

WATCH AND PRAY

Watch! Pray!! Be Holy!!!

APRIL - 2026

# HE WAS WOUNDED FOR OUR TRANSGRESSIONS

But he was pierced for our transgressions, he was crushed for our iniquities; the punishment that brought us peace was on him, and by his wounds we are healed. - Isaiah 53:5

Jesus underwent through many sufferings for our deliverance. He was crushed, pierced, and bruised under incredible stress and pain. Through it all, His suffering was not in vain. He restored us from our transgressions. Christ chose to undergo the terrible pain that we deserved to restore our relationship with God. He faced our trespasses to take them down with the fierceness of His love and the fullness of His redemption. Jesus' greatest suffering came from bearing the weight of the sins of the world on Himself; from the chastening from His Father that should have come upon us, for our sins.

Jesus was absolutely holy, absolutely glorious, and absolutely perfect. As we have seen, He committed no violence, nor was there any deceit in His mouth. All He had ever heard from God the Father was this is My Beloved Son, in whom I am well pleased. But this perfect, glorious, spotless Son of God bore our sins in His body on the cross. That Perfect One, who had never been separated from God, was suddenly weighed down with the weight of the guilt of all of our sin. The agony of the cross that the pure and perfect Son of God had the wickedness of all our sins come upon Him who hated sin.

The Lord Jesus was innocent, but He selflessly bore our transgressions and sins, to grant us peace and healing, to reconcile us with God. He willingly endured all the pain and humiliation, ultimately being nailed to the cross, shedding His precious blood, paying the price of His life for our sins, and granting us forgiveness. This is God's great and selfless love and salvation for us. God says, Without Jesus' redemption, mankind would forever have lived in sin and become the progeny of sin, the descendants of demons. Continuing thus, the whole world would have become the land where Satan dwells, the place of its habitation. The work of redemption, however, required showing mercy and loving kindness toward mankind; only by such means could mankind receive forgiveness and ultimately win the right to be made complete and fully gained by God.

If Jesus had not been crucified, if He had only healed the sick and exorcised demons, then people could not have been completely forgiven of their sins. In the three and a half years that Jesus spent doing His work on earth, He completed only half of His work of redemption;

*Please 'Pray' for a permanent place in Mambalam for our Parama Nambikkai Ministries and obey as God says for this ministry to help us. You can download our messages every month through e-magazine from my website www.risaiah.com to show others as you are blessed.*

www.risaiah.com Pastor R. Isaiah

then, by being nailed to the cross and becoming the likeness of sinful flesh, by being handed over to the evil one, He completed the work of crucifixion and mastered the destiny of mankind. Only after He was delivered into Satan's hands did He redeem mankind. For thirty-three and a half years He suffered on earth, being ridiculed, slandered, and forsaken, even to the point where He had no place to lay His head, no place of rest, and He was later crucified, with His whole being, a holy and innocent body nailed to the cross. He endured every kind of sufferings. Those in power mocked and whipped Him, and the soldiers even spat in His face; yet He remained silent and endured until the end, submitting unconditionally to the point of death, whereupon He redeemed all of humanity.

When we're in trouble, we look for comfort in many places. But for those wanting to heal, Isaiah 53:5 shines a light of hope. It says, By His stripes, we are healed. This verse is a key to spiritual healing, offering peace and divine forgiveness. Life's ups and downs can make us feel broken. But the above verse reminds us healing is possible and promised. It tells us to seek comfort from a power greater than us. This power understands our pain and offers us peace. Reflecting on Christ's suffering, as described in this verse, brings us forgiveness and grace. It invites us to live in peace. Let's explore these words and see how they still offer strength and promise of healing today.

When we confess our sins, He is faithful and righteous to forgive our sins, and cleanse us from all unrighteousness. For by His stripes we are healed. Not a healing of the body, but an everlasting healing of the spirit and the forgiveness of sins. By His death and Resurrection, the Lord Jesus paid the enormous price for our sins and broke the power of sin and death in our life forever, returning us into fellowship with the Father.

Atonement and redemption are key to understanding Christ's sacrifice. Atonement cleanses us from sin, and redemption means being set free from sin and sadness. These ideas are not just words; they change lives, bringing healing and new life. Forgiveness and grace are crucial for healing. Forgiveness frees us from past mistakes, and grace gives us hope for the future. Experts say these can bring great emotional relief and help us heal fully. Jesus' death and resurrection accomplished the redemptive work foreshadowed by the Suffering Servant. Through His sacrifice, He bore the weight of humanity's sins, providing a way for people to be reconciled to God and experience healing and restoration. Jesus' fulfillment of the Suffering Servant prophecy demonstrates the depth of God's love and His unwavering commitment to redeeming His creation.

**-Dr. S.Jehoashan Kingsly** Ph.D.,

## ATTENTION PLEASE

Your thanks giving testimonies, offerings, gifts, money orders are all welcomed, accepted and used for His Victorious ministry. Money may be sent through **net banking as in :**

**PARAMANAMBIKKAI MINISTRIES**
**(in India only)**
**CBS Code : 00073,**
**IFS Code: IDIB000A031**
**Current A/c. No.980288648**
**Indian Bank, Ashok Nagar, Chennai-83**

To My address:

Sis. Rita Isaiah
214/2, AVA Palace,Flat G1, V.G.N. Padma Avenue,
Kolapakkam, Chennai - 600 128.
**Ph : 044-24710267**
**Cell : +91 9384710267, 9789815830**
E-mail : isaiahr@hotmail.com
Fax : 91-044-24710267
**Our website : www.risaiah.com**

# பொறுமையின் மேன்மைகள்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நம்மை கண்மணியை போல் காப்பாற்றினார். இந்த மாதத்திலும் பரம நம்பிக்கை இதழின் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைக்கு நாம் தியானிக்கப்போகிற தேவ வசனம் என்னவென்றால், ஆவியின் கனிகளில் மிக முக்கியமான கனியாகிய "பொறுமை" அல்லது நீடியபொறுமையாகும். தேவ பிள்ளைகளாகிய நாம் எவைகளிலெல்லாம் பொறுமையாயிருக்க வேண்டும் என்று தியானிப்போம்.

**1. பேசுகிறதிலே பொறுமையாயிருக்க வேண்டும் (யாக்.1–19)**

நாம் பேசுகிறதற்கு பொறுமையாயிருக்க வேண்டும். யாக்கோபு 1:19ல் நாம் வாசிக்கிறபடி "யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்கு பொறுமையாயும், கோபிக்கிறதற்கு தாமதமாயும்" இருக்க வேண்டும். மேலும் நீதி 10:19ல் கூறியப்படி, சொற்களின் மிகுதியில் பாவமில்லாமல் போகாது. தன் உதடுகளை அடக்குகிறவனே புத்திமான். நாம் குணசாலியான பெண்ணை குறித்து தியானிப்போமானால், நீதி 31:26ல் கூறியப்படி "குணசாலியான பெண் ஞானம் விளங்க தன் வாயைத்திறக்கிறாள். எனவே தேவ பிள்ளைகள் நாம் பேசுகிறதிலே ஞானமாய் இருந்தால், நாம் புத்திமான்களாய், குணசாலியாய் ஜீவிக்க முடியும்".

**2. உபத்திரத்திலே பொறுமையாயிருக்க வேண்டும் (ரோமர் 12:11)**

நமக்கு நேரிடுகிற எல்லா உபத்திரவத்திலேயும் பொறுமையாயிருக்க வேண்டும். "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" (யோவான் 16:33) என்று பார்க்கிறோம். மேலும் சங்.34:19 ல் கூறியபடி "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்" நாம் இந்த உலகத்திலே நீதிமான்களாய் ஜீவிப்போமானால், அநேக உபத்திரவங்களை எதிர்கொள்ள நேரிடும். ஆனாலும் கர்த்தர் அவை எல்லாவற்றினின்றும் நம்மை விடுவிக்கிறார். யாக். 5:11ல் நாம் தியானிப்போமானால் "இதோ பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே" யோபின் பொறுமையைக் குறித்து கேள்விப்பட்டிருக் கிறீர்கள் என்று கூறுகிறது. நீதிமானாகிய யோபு தனக்கு நேரிட்ட எல்லா உபத்திரவத்திலேயும் பொறுமையாயிருந்து இழந்த எல்லாவற்றையும் இரட்டத்தனையாய் திரும்பப் பெற்றான்.

**3. வாக்குத்தத்தை சுதந்தரித்துகொள்ள பொறுமையோடு காத்திருக்க வேண்டும் (எபி 6:15)**

நீதிமானாகிய ஆபிரகாம், எபி.6:15ல் கூறியபடி விசுவாசத்தோடு வாக்குத்தத்த பண்ணப்பட்டதைப் பெற்றுக்கொள்ள காத்திருந்தான். "அவன் பொறுமையாய் காத்திருந்து வாக்குத்தத்தம் பண்ணப் பட்டதைப் பெற்றான்" சிலவேளைகளில் வாக்குத்தத்ததை சுதந்தரித்து கொள்ள அநேக பரிட்சைகள், அவமானங்கள், நிந்தைகளைச் சந்திக்க நேரிடும். சங். 40:1ல் நாம் வாசிக்கிறபடி "கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருந்தேன், அவன் என்னிடமாய் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார். ஆங்கில வேதகாமத்தில் நாம் வாசித்தால், "I waited patienty for the Lord; he turned to me and heard my cry" நாம் நம்முடைய வாக்குத்தத்தை சுதந்தரிக்க வேண்டுமானால் நமக்கு நேரிடும் உபத்திரவத்திலே, பொறுமையோடு காத்திருந்து அவரை நோக்கி அழுது ஜெபிப்போமானால், கர்த்தர் நம்முடைய கூப்பிடுதலின் சத்தத்திற்கு உடனே செவி கொடுப்பார்.

**4. பொறுமையோடு காத்திருக்கிறவர்கள் பாக்கியவான்கள்** (ஏசா – 30.18)

நாம் கர்த்தருக்காக அவருடைய கிரியைகளுக்காக பொறுமையோடு காத்திருக்க வேண்டும். நாம் நீதிமானாயிருந்தால், ஆவியின் கனிகளாகிய ஒன்பது கனிகளும் நம்மிடத்தில் இருந்தால் முக்கியமாக நீடிய பொறுமையாகிய கனி நம்மிடத்தில் இருந்தால், நாம் தேவனுடைய பிள்ளைகளாகிய நீதிமான்கள், நாம் கர்த்தருக்காக எல்லாவற்றிலும் பொறுமையாய் காத்திருப்பவர்களை பாக்கியவான்கள் என்று வேதம் கூறுகிறது. வேதத்திலுள்ள அனைத்து தேவ பிள்ளைகளும் தேவனுக்காக நீடிய பொறுமையுடன் காத்திருந்து வாக்குத்தத்தின் பாக்கியத்தை பெற்றவர்கள். ஆபிரகாம், யோசேப்பு, தாவீது, யோபு மற்றும் அநேக நீதிமான்களை கர்த்தர் அவர்களை வாக்குத்தத்தை சுதந்தரித்து கொள்ள நீடிய பொறுமையுடன் காத்திருந்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டார்கள்.

**5. நமக்கு நியமித்த ஓட்டத்தில் பொறுமையோடு ஓட வேண்டும் (எபி. 12:1)**

நாம் நம்முடைய ஜீவியகாலத்தில், கர்த்தர் நமக்கு நியமித்த பாதைகளில் பொறுமையோடு ஓடவேண்டும். எபிரேயர் 12:2ல் வாசிப்போமானால், இயேசு கிறிஸ்து தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்து, தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். தேவ பிள்ளைகளே! இந்த உலக வாழ்க்கை மிகவும் கடினமான பாதை தான். ஆனால் கர்த்தர் நமக்கு நியமித்த பாதையில் சோர்ந்துபோகாமல் நாம் நம்முடைய ஓட்டத்தை ஓடி முடித்தால் நித்திய ஜீவனை சுதந்தரித்து கொள்வோம். எபிரேயர் 12:3ல் "நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு" இயேசுவையே நினைத்துக் கொள்ளவேண்டும். நாம் நமது பரம தகப்பனாகிய இயேசுவை முன்மாதிரியாக வைத்து, அவரைப் போல் நீடிய பொறுமையுள்ளவர்களாய் நமக்கு எதிராக தீங்குசெய்பவர்களை மன்னித்து, அவர்களை நேசித்து அவர்களை பரலோக ராஜ்யத்திற்கு பாத்திரராக மாற்றுவதற்கு நீடியபொறுமையுடன் காத்திருந்து ஜெபிப்போம்! ஆத்தும ஆதாயம் செய்வோம்! கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!!


**உங்கள் பிரயோஜனத்துக்காக**
**யூடியூப் (You Tube) :-**
Paramanambikkai Messages
Paramanambikkai Songs
Paramanambikkai Ministries
**பாருங்கள்**


**இடத்திற்காக**

மாம்பலத்தில் பரம நம்பிக்கை ஊழியங்களுக்கான ஒரு நிரந்தர இடத்தைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரமாக தர, அதிசயம் நடக்க, தேவ நாமம் மகிமைப்பட, பரிசுத்தாவியானவர் ஜெயம் தர ஜெபித்துக் கொள்ளுங்கள். – **www.risaiah.com**

**உங்கள் கவனத்திற்கு**

உன்னதப்பாட்டு – விளக்கவுரை சகோதரி ரீட்டா ஏசாயா எழுதியதைக் கொண்டு பரிசுத்தாவியானவர் கிரியை செய்து ஆத்துமாக்கள், சபைகள், தேவனுடைய நாளுக்கு ஆயத்தப்பட, நற்கிரியைகளைச் செய்ய ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள். புத்தகம் தேவைப்படுவோர் **'Word of Christ'** விற்பனையாளரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாங்கி பயனடையுங்கள் (**Phone Number 044-26613242**). பரமநம்பிக்கை ஊழியங்களுக்காக, விசுவாசிகளின் சுவிசேஷ ஐக்கியத்திற்காக ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள்.

***www.risaiah.com*** இணையதளம் மூலமாக அநேகர் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, புதுப் பிக்கப்பட (இரட்சிப்பு) இந்நாட்களில் "ஜெபியுங்கள்". நீங்களும் இந்நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ள இச்செய்தியை உங்களுக்கு பகிர்ந்து கொள்ளுகிறேன்! –போதகர் ஆர்.ஏசாயா

**முந்தினவைகளை நினைக்க வேண்டாம், பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம்** - *(ஏசா. 43:18)*

## சிப்பியில் முத்து

**கடந்த மாத சிப்பியில் உள்ள முத்துக்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | எஸ்தர் | – எஸ். 4:16 |
| 2. | தானியேல் | – தானி 9:6 |
| 3. | அன்னாள் | – லூக்கா 2:37 |
| 4. | ஆகாப் | – I இரா. 2:27 |
| 5. | தாவீது | – II சாமு 12:16 |
| 6. | தாவீது | – சங். 69:10 |
| 7. | பரிசேயன் | – லூக்கா 18:12 |
| 8. | நெகேமியா | – நெகே 1:4 |
| 9. | பர்னபா, சவுல் | – அப். 13:2 |
| 10. | எஸ்றா | – எஸ்றா 8:12 |

**கடந்தமாத சிப்பியில் உள்ள முத்துக்களைச் சரியாக கண்டெடுத்தவர்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | சகோ.சரோஜினி கோயில்பிச்சை | – பாளையங்கோட்டை |
| 2. | சகோ. ரதி ஜாய்ஸ் | – கே.கே.நகர் |
| 3. | சகோ. பெர்சிஸ் | – வேளச்சேரி |
| 4. | சகோ. தங்கம் ஐசக் | – வேலூர் |
| 5. | சகோ. ரெஜினா வின்செண்ட் | – பெங்களூர் |
| 6. | சகோ. ராதா | – பெருமாள்புரம் |
| 7. | சகோ. எசேக்கியேல் குமரன் | – புளியந்தோப்பு |
| 8. | சகோ.மெர்சி கிங்ஸ்லி | – கொளப்பாக்கம் |
| 9. | சகோ. எஸ்தர் டேவிட் | – கொளத்தூர் |
| 10. | சகோ. எஸ்தர் பானு | – பொழிச்சலூர் |
| 11. | சகோ. மேரி புஷ்பம் | – துரைபாக்கம் |
| 12. | சகோ. சித்ரா | – பெங்களூர் |
| 13. | சகோ. எமிமா | – பொழிச்சலூர் |
| 14. | சகோ. ஜென்ஸி | – பொழிச்சலூர் |
| 15. | சகோ. லில்லி புஷ்பம் | – மாம்பலம் |
| 16. | சகோ. பிரேமா ஜெயசேகர் | – வானகரம் |
| 17. | சகோ. புனிதா அசரியா | – அண்ணா நகர் |
| 18. | சகோ. சிப்போராள் எபனேசர் | – மாம்பலம் |
| 19. | சகோ. பவித்ரா | – திருவண்ணாமலை |
| 20. | சகோ. கேத்தரின் கவிதா | – திருவண்ணாமலை |
| 21. | சகோ. இராஜகுமாரி | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 22. | சகோ. ஜெபா பெனியேல் | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 23. | சகோ. எப்சி இம்மானுவேல் | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 24. | சகோ. சுலோச்சனா | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 25. | சகோ.வசந்த் கமாலியேல் | – சௌதி அரேபியா |
| 26. | சகோ.ஷேரன் நிர்மல்குமார் | – திருப்பத்தூர் |
| 27. | சகோ. ரெஜினா மேரி | – பெருமாள்புரம் |
| 28. | சகோ. தங்கத்தாய் | – பெருமாள்புரம் |
| 29. | சகோ. வைலட் பியூலா | – பெருமாள்புரம் |
| 30. | சகோ. லிடியா | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 31. | சகோ. மார்கிரேட் ஜோ | – கோவை |
| 32. | சகோ. ஷீபா ஞானதுரை | – கோவை |
| 33. | சகோ. அருணா | – வண்டலூர் |

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டாக, சரியான முத்துக்களை முயற்சித்து எடுத்துத் தந்த உங்களுக்கு "வரிசை பிரகாரம் முதலில் பதில் அனுப்புபவர்கள் வரிசைப் படுத்தப்படுகிறீர்கள்", உங்களுக்கு எங்கள் அன்பான பாராட்டுக்கள்! சரியான முத்துக்களை எடுக்க முடியாதவர்களும் இவ்விதழிலே "முயற்சித்துப் பாருங்கள்." வெளிநாட்டு, உள்நாட்டு வாசகர்கள் முத்துக்களை isaiahr@hotmail.com இ-மெயிலிலும் அனுப்பலாம். ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் பதில் எழுதியனுப்பி எங்களை சந்தோஷப்படுத்துங்கள்.

## இம்மாத சிப்பிகள்

1. உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் என்றது யார்?
2. கர்த்தரைப் பாடுங்கள் அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார் என்றவள் யார்?
3. மகிமை இஸ்ரவேலை விட்டு விலகிப் போயிற்று என்று சொல்லி தான் பெற்ற பிள்ளைக்கு என்ன பெயரிட்டாள்?
4. என் மகிமையைப் புழுதியிலே போட்டுவிட்டேன் என்றது யார்?
5. என்னோடே கூட கர்த்தரை மகிமைப் படுத்துங்கள் என்றது யார்?
6. எப்பிராயிமின் மகிமை ஒரு பறவையைப் போல் பறந்து போம் என்ற தீர்க்கதரசி யார்?
7. இஸ்ரவேலின் மகிமையைத் திரும்பி வரப் பண்ணுவார் என்ற தீர்க்கத் தரிசி யார்?
8. என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது என்றது யார்?
9. தேவனுக்கு மகிமையை செலுத்தாதபடியினால் புழு புழுத்து இறந்தவன் யார்?
10. ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் என்றது யார்?

*குறிப்பு: உங்களுக்கு தெரிந்த மக்களுக்கு நமது பத்திரிகையை வாசிக்க, அறிமுகப்படுத்த எனது* **www.risaiah.com "E-Magazine'** *சென்று கீழ் இறக்கம்* **(Down Load)** *செய்து பெற்றுக் கொள்ளுமாறு தெரியப் படுத்துங்கள். அந்தந்த மாதத்திற்கு உரியது மட்டும் கீழ் இறக்கம் செய்யலாம்* **(Download)** *தொடர்ந்து எங்களுக்காக ஜெபியுங்கள்.* **ஆத்துமாக்கள் சாந்தி சமாதானம் அடைவார்களாக!** *புதிய விலாசங்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

**PRINTED BOOK** Book-Post
(Private Circulation Only)

To

If undelivered return to :
**Parama Nambikkai**
P.B. No.3276, Chennai - 600 033, South India.

**காணிக்கை ரூ.50.00**

Printed by Mr. Devavaram, Meipporul Achakam, 278, K.H. Road, Ayanavaram, Chennai - 600 023.
Published and editored, Owned by Rev. R.Isaiah from at 23, Kodambakkam Road, West Mambalam, Chennai-33. for Paramanambikkai Ministries Trust.